பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 27 சனிக்கிழமை 13.11.2021 கதிர் 08

## இது ரகசியம் அல்ல!

நான் நேற்று நள்ளிரவு இப்பத்தியை எழுதிக் கொண்டிருந்த போது, அமெரிக்கா செல்லும் தமிழ்க் கூட்டமைப்பு பிரதிநிதிகள் குழு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது. நீங்கள் இப்பத்தியை வாசிக்கும் போது –

பக்கம்02

## அலாவுதீனின் அற்புத விளக்கு எங்கே?

# பஸிலின் கன்னி பட்ஜட்டை போட்டுத் தாக்கும் எதிரணி!

## அரசு வீடு செல்லத் தயாராக வேண்டும் எனவும் வலியுறுத்து

கொழும்பு, நவம்பர் 13

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக விமர்சித்துள்ளது.

உறுதியான திட்டங்கள் அற்ற, வெற்று ஆவணமே இந்தப் பட்ஜட் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

2



## வடக்கு மாகாணத்தில் சமூக பொலிஸ் பிரிவு

### ஆளுநர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் சமூகப் பொலிஸ் பிரிவுகள் நிறுவப்படும் என மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு மாகாணத்தில் குற்றச் செயல்களைத் தடுக்க சமூகப் பொலிஸ் பிரிவுகள் நிறுவப்படும். இதற்காக வடக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற

2

## இன்று இயங்கும் வடக்கு மாகாண பாடசாலைகள்

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் வகுப்புக்கள் இன்று நடைபெறும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

தீபாவளி தினத்தை முன்னிட்டு விசேட விடுமுறை வழங்கப்பட்டதற்கான பதில் பாடசாலை நாளாக இன்றைய நாள் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கடும் மழையின் காரணமாக

2

## ஒரே நாளில் 23 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்த லுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத்

2

# புஸ்வாணமானது பஸிலின் ‘பட்ஜட்’

## சாடுகின்றது தமிழ் முற்போக்குக் கூட்டணி



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் முன்வைத்த வரவு – செலவுத் திட்டம் புஸ்வாணத்தைப்போன்றது என தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:–

பட்ஜட் ஒன்று வரும்போது மக்களுக்கு எதிர்பார்ப்பு

2

## கொழும்பில் மண்சரிந்து இளைஞர் பலி

கொழும்பு – பேஸ்லைன் வீதியில் கிருலப்பனை எட்மண்டன் வீதியில் நீர்க்குழாய் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட வடிகானில் மண் சரிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் வடிகான் வெட்டிக்கொண்டிருந்த இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்

2

## மீண்டும் முடங்குமா நாடு? நாளாந்தம் எகிறும் தொற்று

### நேற்று மட்டும் 723 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்று 723 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 48 ஆயிரத்து 784 ஆக எகிறியுள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 333 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 23 ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது.

## பொருள்கள் விலை அதிகரிப்புக்கு பட்ஜட்டில் எவ்வித தீர்வும் இல்லை

### ஜே.வி.பி. சுட்டிக்காட்டு



2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு எவ்வித தீர்வும் பரிந்துரைக்கப்படவில்லை என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சரால் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே

2

## பாட்டி வடை சுட்ட கதை!

### பஸிலின் பட்ஜட் உரையை இப்படி விமர்சிக்கின்றார் வடிவேல் சுரேஷ்



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வரவு – செலவுத் திட்ட உரையை, ‘பாட்டி வடை சுட்ட கதை’ என்று விமர்சித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வரவு – செலவுத்

2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாலை 4 மணிக்கு – குழுவினரின் விமானம் டோஹா நோக்கிப் புறப்பட்டி ருக்கும். டோஹாவிலிருந்து வொஷிங் டன் டி.ஸிக்கு அடுத்த விமானம். நாளை மறுதினம் முதல் பல சுற்றுப்பேச்சுகள். பல தரப்பினருடனும்.

ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந் திரன், கனகேஸ்வரன் மற்றும் சட்ட நிபு ணர் நிர்மலா சந்திரஹாசன் ஆகியோர டங்கிய இந்த மூவர் குழு இன்று அதி காலை அமெரிக்கா புறப்பட முன்னர் நடந்த இரண்டு சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவை. இவ்விடயங்களை ஒட்டிய விவ ரங்களைக் கவனித்து வரும் வாசகர்கள் கேட்பது புரிகின்றது.

ஆனால் ஜனாதிபதி கோட்டாபய – சுமந் திரனின் உரையாடலின் வாசகங்களை மீண்டும் ஒரு தடவை வாசித்துப் பாருங் கள். அர்த்தங்கள் புரியும்.

சுமந்திரன் அமெரிக்கா செல்வது தொடர்பான முழு விடயதானங்களும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக் குத் தெரிந்திருக்கின்றது. அதனால்தான் அவை பற்றி ஏதும் குறிப்பிடாமல், நேர டியாக எப்போது திரும்புகின்றீர்கள் என்று நெருக்கமாகக் கேட்டிருக்கின்றார் ஜனா திபதி.

கூட்டமைப்பின் அமெரிக்க விசிட்டின் பின்னர் கூட்டமைப்புடன் சேர்ந்து பணி யாற்ற வேண்டிய வேலைகள் – திட்ட



அறிய வேண்டியவை என்பதனால் விவ ரிக்கிறேன்.

நேற்றுப் பகல் இந்த மூவர் குழு கொழும்பில் சம்பந்தன் ஐயாவின் வீட் டுக்குச் சென்று அவரைச் சந்தித்து இறுதி நேர ஆலோசனைகளில் ஈடுபட்டது.

"ஐயா, உங்கள் ஆசி பெற்றுச் செல்ல வந்திருக்கிறோம்." – என்றார் கனகேஸ் வரன். ஆசி வழங்கும் பாணியில் பதில ளித்தார் சம்பந்தன்.

"வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணிக்காக பயணிக்கின்றீர்கள். உங்கள் முயற்சி தமிழ் இனத்தின் வெற் றியாக அமையும்" – என்று கண்ணை மூடித் தியானித்தபடி சம்பந்தன் ஐயா வாழ்த்தினார். மனதுக்குள் திருகோண மலை பத்திரகாளித் தாயைப் பிரார்த்தி ருப்பார் என்று நினைக்கிறேன்.

நான் கூறப்போகும் அடுத்த விடயம் ஒரு சிறிய சம்பாஷணைதான். ஆனால் அதற்கு – அதற்குள் – பல அர்த்தங்கள் பொதிந்திருக்கின்றமையை விடயமறிந்த வாசகர்கள் தாமாகவே ஊகித்துக் கொள் வர் என்று நம்புகிறேன்.

நேற்று வரவு – செலவுத் திட்டம். வழமை போல அது முடிந்ததும் நிதியமைச்சர் எம்.பிக்களுக்கு வழங்கும் தேநீர் விருந்து. வரவு – செலவுத் திட்ட உரையை நாடாளு மன்றத்தில் அமர்ந்திருந்து செவிமடுப் பதற்கு வந்திருந்த ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவும் கூட தேநீர் விருந்தில் கலந்து கொண்டனர்.

அச்சமயம் நெருங்கி வந்த தமிழ்க் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனை இரண்டு பக்கக் கைகளிலும் பற்றிப்பிடித்து சுமார் ஓரிரு நிமிட நேரம் சுகம் விசாரித் தார் பிரதமர் மஹிந்தர். பக்கத்தில் கோட் டாபய ராஜபக்ஷ பார்த்திருந்தார். அது வல்ல விடயம். அதையடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுமந்திரனுடன் ஓரிரு நிமிட நேரம் உரையாடினார். அதில் தான் விடயமுண்டு.

அருகில் சாணக்கியன், சித்தார்த்தன், விநோதராதலிங்கம் ஆகியோர் நின்றிருந் தனர். அவர்களுக்கும் அந்த உரையா டல் விளங்கியிருக்கக் கூடும்.

சுமந்திரனைப் பார்த்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ "நாங்கள் சந்திக்க வேண்டும். நீங்கள் எப்போது திரும்புகின் றீர்கள்?" – என்று கேட்டார்.

"மாத இறுதியில்" – என்றார் சுமந்திரன்.

"அப்படியா? வந்ததும் சந்திப்போம்." – என்று பதில் தந்தார் ஜனாதிபதி.

இந்த உரையாடலில் என்ன இருக் கின்றது, பிரிட்டன் சென்று நாடு திரும் பியதும் கூட்டமைப்பினரைச் சந்திப்போம் என்று ஜனாதிபதி தரப்பு ஏற்கனவே கூறி யிருந்ததுதானே என்று உங்களில் சிலர் மிடப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட பணிகள் – தமக்கு இருப்பதை உணர்ந்தவராகப் பதிலளித்திருக்கின்றார் ஜனாதிபதி.

சுருக்கமாகக் குறிப்பிடுவதானால் Everything is already well set. அனைத் துமே – ஏற்கனவே – நன்றாகவே – நிர்ண யிக்கப்பட்டுவிட்டன. அதன்படி விடயங்கள் நடந்தேறும்.

யோகர் சுவாமிகளின் மகா வாக்கி யத்தில் கூறுவதாயின் – 'எப்பவோ முடிந்த காரியம்.' அவ்வளவுதான்.

இந்த விடயங்களை ஒட்டி இன்னும் சில தகவல்கள் உண்டு.

இந்திய – இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவின் கூட்டம், வழமைக்கு மாறாக 125 இற்கும் அதிகமான எம்.பிக் களுடன் நேற்று முன்தினம் நடைபெற் றமை பற்றி நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அக்குழுவின் தலைவராக அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவு செய் யப்பட்டார் என்றும் தெரிவித்திருந்தேன்.

துணைத் தலைவராக இரா.சம்பந் தனின் பெயர் பிரேரிக்கப்பட, அதை ஏற்க மறுத்தார் சம்பந்தன். தம் இடத்துக்கு வயதில் குறைந்த ஒருவரைத் தெரிவு செய்வோம் என்றார் சம்பந்தன். உடன டியாக அப்பதவிக்கு சுமந்திரன் ஏகமன தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"சம்பந்தன் மறுத்ததும், சுமந்திரன் நியமிக்கப்பட்டமையும் கூட முன் ஆயத் தங்களோடு நடைபெற்ற – திட்டமிடப்பட்ட – சம்பவம் போல என் மனதுக்குப்பட்டது." – என்று தென்னிலங்கை எம்.பி. ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

இதேபோன்று சீன – இலங்கை நட் புறவுக் கழகத்தின் துணைத் தலைவரா கத்தான் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட் டிருந்தார். அதை ஒட்டி இந்தியத் தரப்பு அதிருப்தியுற்றிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தமை வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

இதற்கிடையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம். பிக்களை சந்திக்க சீனத் தூதரகம் விரும் பியதாகவும், ஆனால் அத்தகைய சந் திப்புக்கு இந்தியத் தரப்பு ஆட்சேபம் தெரி வித்திருக்கின்றமையால் தமிழ்க் கூட்ட மைப்பு செய்வதறியாது தடுமாறி நிற்பதா கவும் கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

இதில் உண்மை, பொய் தெரிய வில்லை. ஆனால் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்த ரெலோ தலைவர் செல்வம் அடைக்க லநாதன் இவ்விடயத்தை ஒட்டி சம்பந் தனுடன் பேசிக்கொண்டிருந்தார் என்பதை உறுதி செய்ய முடிந்தது. ஆனால் அவர் இவ்விடயத்தில் என்ன தீர்மானம் என்ப தைத் தெளிவாக உறுதிப்படுத்த முடிய வில்லை. அவர்தான் அதைத் தெளிவு படுத்த வேண்டும்...!

– மின்னல் –

# 23 இந்திய மீனவர்களுக்கும் நவ. 15 வரை மறியல் நீடிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைதுசெய்யப் பட்ட 23 இந்திய மீனவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற வழக்கு விசார ணைகளை அடுத்தே பருத்தித்துறை நீதி மன்றம் இந்த உத்தரவை வழங்கியுள் ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 23 பேர் சார்பிலும் இந்தியத் துணைத் தூதரகத் தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி லோ.குக தாஸ் ஆஜராகியிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட 23 மீனவர்க ளுக்கு எதிராகவும் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்டமை, தடை செய்யப் பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன் படுத் தக்கூடிய நிலையில் வைத்திருந் தமை, அனுமதிப் பத்திரமின்றி மீன்பிடியில் ஈடு பட்டமை போன்ற மூன்று குற்றச்சாட்டு கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் வழக்கை விசாரித்த நீதிவான் எதிர் வரும் 15ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத் தார்.

மீனவர்கள் வழக்கு விசாரணை களுக்கு யாழ். இந்தியத் துணை தூதரக அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர்.

இந்திய மீனவர்களுக்காக இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி சார் பில் சட்டத்தரணி ஜோய் மகாதேவாவும் ஆஜராகியிருந்தார்.

## பஸிலின் கன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், பொருளாதார நெருக் கடியை சமாளிப்பதற்கான, பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கான திட் டங்களும் இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பட்ஜட் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் சிலர் வெளியிட்ட கருத்துகள் வருமாறு:-

பஸிலுக்கு ஏழு மூளைகள், அலாவு தீனின் அற்புத விளக்கு போல் பட்ஜட் அமையும் என ஆளுங்கட்சியினர் கூறு ரைத்தனர். ஆனால், இன்று மக்கள் நல திட்டங்களைப் புறக்கணித்தும், வரிச் சுமையை அதிகரிக்கும் விதத்திலும் பட்ஜட் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பயனற்ற பாதீடாகும். அரசு வீடு செல்லத் தயாராக வேண்டும் – என்றனர்.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித் தார்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த 19 வயதான இளைஞரே இதன்போது உயிரிழந்துள் ளார்.

இளைஞரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## புஸ்வாணமானது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருக்கும். இம்முறை அப்படி எந்தவொரு எதிர்பார்ப்பும் மக்களிடம் இல்லை.

மலையகத்தில் லயன்களை இல் லாதொழிப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மிகக்குறைந்த நிதியே இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கிய நிதியைக் கூட இவர்கள் மலை யகத்துக்குச் செலவிடுவார்களா என்ற சந்தேகம் இருக்கின்றது.

காரணம், அரச செலவீனம் 3 ஆயிரத்து 912 பில்லியன் ரூபாவாக இருக்கின்றது. வருமானம் 2 ஆயிரத்து 284 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. எனவே, எஞ்சிய தொகைக்கு என்ன செய்யப் போகின்றது என்பதற்கு எந்தத் திட்டமும் இந்த அரசிடம் இல்லை.

ஆட்சியிலுள்ள இவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. ஆனால், மக்கள் நிலை கவலையாகவே இருக்கின் றது – என்றார்.

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண் ணிக்கை 13 ஆயிரத்து 950 ஆக அதி கரித்துள்ளது.

நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப் பட்ட சாவுகளில் 11 ஆண்களும், 12 பெண் களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 21 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

## பாட்டி வடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டம் ஊடாக நிவாரணங்கள் கிடைக் கும், நன்மைகள் பயக்கும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அத்தியாவசி யப் பொருட்களின் விலைகள் கூட குறைக் கப்படவில்லை. அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. பெருந்தோட்ட மக்களுக்கு சலுகைகள் இல்லை.

மாற்றம் வரும் என நாம் நினைத்தோம். பயனற்ற பாதீடே முன்வைக்கப்பட்டுள் ளது. பாட்டி வடை சுட்ட கதைபோல, உரையை கேட்டுக்கொண்டிருந்தோம். மிகவும் மோசமான இந்த வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியாது – என்றார்.

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இளைஞர்களைத் தெரிவு செய்து அவர் களின் விசேட திறமைகளை இனங்கண்டு இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப் பதே எமது திட்டமாகும்.

இந்த அணிகளைத் தெரிவு செய்யு மாறு யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குப் பொறுப் பான பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## இன்று இயங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப் பட்ட நிலையில் அந்த நாள்களுக்கு மாற் றீடாகவும் வகுப்புக்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

## பொருள்களின் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சேதன உரத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளின் விளைச்சல் பாதிக்கப் பட்டால் நஷ்டஈடு வழங்கப்படும் என்று அரசு தெரிவித்து வந்தாலும், இந்த வரவு – செலவுத் திட்டத்தில் அது குறித்து எது வும் குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருட்களின் விலை மக்களால் தாங் கிக்கொள்ள முடியாதளவு அதிகரித்துள் ளமை மற்றும் பொருட்களின் தட்டுப்பாடு என்பன நாட்டில் உள்ள பிரதான பிரச் சினைகளாகும்.

வரவு – செலவுத் திட்டத்தில் அரசின் செலவுகளாக 5.2 ட்ரில்லியன் குறிப்பிடப்பட் டுள்ள நிலையில், வருமானமாக 2.2 ட்ரில்லியன் ரூபா மாத்திரமே குறிப்பிடப்பட் டுள்ளது.

இது 3 ட்ரில்லியன் ரூபா கடன் பெறும் வரவு – செலவுத் திட்டமாகும்.

இலங்கையின் வீழ்ச்சிப் பொருளா தாரப் பயணத்தை மாற்றியமைக்க எவ் வித திட்டமும் இந்தப் பட்ஜட்டில் இல்லை – என்றார்.

# தேசிய பாதுகாப்பு கல்லூரி ஜனாதிபதியினால் திறப்பு

இலங்கையின் தேசிய தேவைகளை உறுதிப்படுத்துவதற்கான தேசிய பாதுகாப்பு, இராஜதந்திர முறைமை மற்றும் அரச கொள்கை பிரிவுகளின் தந்திரோபாயச் சிந்தனையாளர்கள் மற்றும் தலைவர்களை உருவாக்குவதே இலங்கை தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் நோக்கமாகும் என இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய பாதுகாப்பு கல்லூரியை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு மூலோபாய கல்வி வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக, வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் வாய்ப்புகளைத் தேடுவதைத் தவிர வேறு வாய்ப்புகள் காணப்படவில்லை.

முப்படையினர், பொலிஸ் மற்றும் அரச துறையில் உயர் பதவி நிலைகளை வகிக்கும் நிறைவேற்று அதிகாரிகளுக்கு, தேசிய பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட கல்விக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில் அமைக்கப்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக இந்த கல்லூரி அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் நட்புறவு நாடுகள் வழங்கும் பாடநெறிகளுக்கு இலங்கை அதிகாரிகளில் சிலர் உள்ளீர்க்கப்படுகின்றமை, பாரிய பிரதிபலன்களைக் கொடுப்பினும், மேலும் பலருக்கு அந்த வாய்ப்புகள் இல்லாது போகின்றன.

எனினும், இந்த பாதுகாப்புக் கல்லூரி நிறுவப்பட்டதன் மூலம், ஒவ்வொரு ஆண்டும் அவ்வாறான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

கொழும்பு பல்கலைக்கழகம், சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலிய பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரி, அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் விசேட நிபுணர்களே இதன் பாடவிதான பரிந்துரைக் குழுவின் உறுப்பினர்களாகக் காணப்படுகின்றனர்.

சீன அரசாங்கத்தால் கேட்போர்கூடம் ஒன்றையும், பாகிஸ்தான் அரசாங்கத்தால் நூலகம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கான பங்களிப்பு பெற்றுக்கொடுத்துள்ளதுடன், நூலகத்துக்கான புத்தகங்களை வழங்க ஆஸ்திரேலிய அரசாங்கமும் முப்படையினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் முதலாவது பாடநெறி, நாளை முதல் 2022 ஒகஸ்ட் மாதம் வரையான 10 மாதக் காலப் பகுதிக்கு நடத்தப்பட உள்ளது. இதற்காக, முப்படை அதிகாரிகள் 27 பேர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் 04 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த கல்லூரி கொழும்பு - 03, காலி வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு உரித்தான மும்தாஜ் மஹால் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## பாணில் காணப்பட்டது நத்தை சுகாதாரத் துறையிடம் முறையீடு



வெதுப்பக உணவு உற்பத்திகளை விநியோகிக்கும் நடமாடும் ஓட்டோ வண்டியில் விற்பனை செய்யப்பட்ட பாணுக்குள் நத்தை காணப்பட்ட சம்பவம் ஒன்று இங்கிரிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இந்த பாணை கொள்வனவு செய்த நபர் இது தொடர்பாக ஓட்டோவில் வந்த விற்பனையாளர் மற்றும் வெதுப்பக உரிமையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

எனினும் பாணில் நத்தை இருந்தமைக்கு தாம் எதனையும் செய்ய முடியாது என அவர்கள் பதிலளித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதனையடுத்து அந்த நபர் சம்பவம் தொடர்பாக இங்கிரிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கூறியுள்ளது.

## குரங்குக்குப் பொறி வைப்பு விவசாயி சிக்கிப் பலியானார்

ஊவா பரணகம அம்பகஸ்தோவ பிரதேசத்தில் குரங்குகளுக்கு வைத்த மின் பொறியில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

67 வயதான ஜீ.எஸ்.எம். செனவிரத்ன என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிழங்கு விவசாயியான இவர், கிழங்கு பயிர்களை குரங்குகளிடம் இருந்து பாதுகாக்க மின்சாரப் பொறியை வைத்துள்ளார்.

தனது காணிக்கு அருகில் செல்லும் அதிசக்தி வாய்ந்த மின் இணைப்பு கம்பியில் இணைப்பை ஏற்படுத்தி குறித்த நபர் சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் பயிர்களை குரங்குகளிடம் இருந்து பாதுகாக்க வைத்த மின்சாரப் பொறியில் அந்த நபரே சிக்கி உயிரிழந்துள்ளார்.

காணிக்கு அருகில் அவரது சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பாக ஊவா பரணகம, அம்பகஸ்தோவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முல்லைத்தீவில் வான்பாய ஆரம்பித்துள்ள 5 குளங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள பெரிய குளங்களில் 5 குளங்கள் வான்பாயத் தொடங்கியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை மழைவீழ்ச்சி பதிவாகாத நிலையிலும் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் மாவட்டத்தில் முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 8 குளங்களில் 20 அடி கொள்ளளவு கொண்ட விசுவமடு குளம் வான்பாய ஆரம்பித்துள்ளது.

புதுக்குடியிருப்பு மருதங்குளம் 14 அடி நீர் கொள்ளளவு கொண்ட குளம் தொடர்ச்சியாக வான்பாய்ந்து வருகின்றது.

வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 12 குளங்களில் பழைய முறுகண்டிக்குளம் 9 அடி நீர் கொள்ளளவு கொண்டகுளம் வான்பாய்கின்றது.

9 அடி நீர் கொள்ளளவு கொண்ட கோட்டைகட்டிய குளமும், 11 அடி நீர் கொள்ளவு கொண்ட தேறாங்கண்டல் குளமும் வான்பாய்கின்றன.

எனவே மக்கள் இது தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## புதுக்குடியிருப்பு பகுதியில் வீடு புகுந்து தாக்குதல்

### நகைகள் கொள்ளை

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இரணைப்பாலை 5ஆம் வட்டாரப் பகுதியில் 8 பேர் கொண்ட கும்பல் வீடு புகுந்து அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு பெறுமதியான நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

வியாழன் இரவு 8 பேர் கொண்ட கும்பலொன்று வீட்டிற்குள் புகுந்துள்ளமையு டன், அதில் 4 பேர் வீட்டின் வெளியில் நிற்க ஏனைய 4 பேர் வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்து வீட்டில் இருந்த வயோதிப தாயார் (வயது - 50) மீது தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் அதில் குறித்த தாயார் காயமடைந்து புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை 21 வயது இளைஞரொருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு அங்கிருந்த தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# குருதி தந்து உறுதி பெறுவோம்!

**வடக்கில் உள்ள எமது இளம் சமூகத்தினருக்கு சமூகக் கடப்பாடு தொடர்பாக ஒரு சவால் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.**

**ஈகத்துக்கு – தியாகத்துக்கு – தற்கொடைக்கு – புகழ் பெற்ற ஒரு மாதத்தில் – கார்த்திகைத் திங்களில் – இந்த அழைப்பு விடும் துரதிர்ஷ்டம் நேர்ந்திருப்பதுதான் மிகவும் மனவருத்தம் தரும் விடயமாகும்.**

**தமது இனமானம் காப்பதற்காக ஆயிரமாயிரமாகத் தமது இன்னுயிரை ஈகம் செய்த மறவீரர்களின் பெருமையைப் பேசும் இந்த மாதத்தில்தான், மனித உயிர்காக்கும் குருதிக்கொடை குறித்து இரந்து கோரிக்கை விடும் நிலைமைக்கு யாழ்.போதனா வைத்தியசாலை சென்றிருக்கின்றது.**

**யுத்த காலத்தில் கூட – பேரழிவுக்கும் போரழிவுக்கும் மத்தியிலும் – யாழ். போதனா வைத்தியசாலையில் குருதிப் பற்றாக்குறை ஏற்படா வண்ணம் பார்த்துக் கொண்ட அப்போதைய இளைய தலைமுறை இப்போது வயது முதிர்ந்து, தனது அடுத்த தலைமுறையின் சமூகப் பொறுப்பற்ற போக்கைப் பார்த்து விக்கித்துப் போய் நிற்கின்றது.**

**தன் இனத்துக்காக, அடுத்த கணத்திலேயே தன்னுயிரிலும் மேலான உடல் சிதறிப் போகும் ஈகத்தைப் புரிந்த ஆயிரமாயிரம் வீரமறவர்களைக் கொண்டிருந்த இந்த இனத்தில், இன்று குருதிக் கொடையாளர்களுக்குப் பற்றாக்குறை என்பது நாரசமாய் வந்து காதில் விழும் துன்பியல் தகவல்.**

**யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் களஞ்சியத்தில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த சேமிப்புக் குருதி 330 பைந்த் ஆகும். ஆனால் நிலைமை மோசமாக வற்றி இப்போது 150 பைந்த் இரத்தம்தான் களஞ்சியத்தில் உள்ளது. அதாவது குறைந்தபட்சக் கையிருப்பில் இருக்கவேண்டிய தொகையில் பாதியளவுதான் உள்ளது.**

**தினசரி யாழ்.போதனா வைத்தியசாலை முப்பது முதல் முப்பத்தியைந்து பைந்த் இரத்தத்தை மருத்துவ தேவைகளுக்கு வழங்கி வருகின்றது. ஆனால் இப்போது தினசரி பத்து முதல் பதினைந்து பைந்த் இரத்தம்தான் கொடையாகக் கிடைக்கின்றது.**

**அதாவது, இந்த நிலைமை – போக்கு – நீடிக்குமானால் அடுத்த ஒரு வாரத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர உயிர்காக்கும் இரத்தத்துக்குக் கைவிரிக்கும் நிலைமை நேரும். சமூகத்தின் பொறுப்பின்மையால் – சமூகம் கடமையுணர்வு தவறியமையால் – பல டசின் மனித உயிர்களை தினசரி இழக்கவும், பலர் மோசமான சுகவீனக் கட்டத்தை அடையவும் நேரலாம்.**

**திடீரென ஏதேனும் பெரும் விபத்துச் சம்பவம், மோசமான இயற்கை அனர்த்தம் போன்றவை ஏற்பட்டால், யாழ்.போதனா வைத்தியசாலை அதற்கு முகம் கொடுக்கும் தகுதியை இழந்து அந்தரிக்கும் நிலைமையும் ஏற்படலாம்.**

**யாழ்.சமூகத்துக்கு இது ஒரு பரிதாப நிலைமை. ஆபத்துக் கட்டம்.**

**கொரோனாவைச் சுட்டியும், விரத காலத்தை ஒட்டியும் இரத்ததானம் வழங்கும் செயற்பாட்டை நமது இளம் சமூகம் ஒத்திப் போட்டிருக்கலாம்.**

**மறைந்த நம் இன மறவர்களின் நினைவாக மாத இறுதியில் நாம் இரத்ததான முகாம்களை ஒழுங்கு செய்ய முற்படுகையில் புலனாய்வு எடுபிடிகள் அதில் தலையிட்டு நிச்சயம் குழப்புவார்கள்.**

**அதுவரைக் காத்திருக்காமல், அந்த மறவர்களை நினைவில் இருந்தி – சமூகத்தின் இன்றைய அவசர, அவசிய தேவையைப் புரிந்து கொண்டு – முற்கூட்டியே இரத்தக் கொடையைக் செய்வோமாயின் சமூகத்துக்கு நம் கடமையை நாம் ஆற்றியவர்களாகவும் அது அமையும். மறவர்களை நினைவு கூர்ந்து, நம் மனத் திருப்திக்கு நாம் சமூக கடப்பாட்டை நிறைவு செய்தவர்களுமாவோம்.**

**நம் இளைய தலைமுறைக்கு இக்கோரிக்கை சமர்ப்பணம்.**

# பல்பரிமான அபிவிருத்தியில் நகர்ப்பகுதியில் நீர் வடிகாலமைப்பும் உள்வாங்கப்படும்!

## வேலணை பிரதேச தவிசாளர் தெரிவிப்பு



பல்பரிமாண அபிவிருத்தியினூடாக முன்னெடுக்கப்பட்டுவரும் வேலணை நகரப் பகுதியின் அபிவிருத்தியின் போது நீர் வடிகாலமைப்பு பொறிமுறை உள்வாங்கப்பட்டு மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளத்தால் தமது வர்த்தக நடவடிக்கைகளை பாதுகாத்து தருமாறு வேலணை நகரப் பகுதி வர்த்தக சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேசத்தின் நகர்ப் பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) நீர் வடிகாலமைப்பு தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் பிரதேசசபை தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி விடுத்திருந்த கோரிக்கையை அடுத்து வடக்கு மாகாணத்தின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் பிரதேச சபையின் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் கள ஆய்வொன்றை முன்னெடுத்திருந்தனர். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே தவிசாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் நகரப்பகுதி வர்த்தகர்கள் குறிப்பிடுகையில்,

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தியின் போது வீதி உயர்ந்துள்ளமையால் மழை வெள்ளம் தமது வர்த்தக நிலையங்களுக்குள் நுழைந்து வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பெருமளவு பொருளாதார இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் வெள்ளத்தை ஒரு பொறிமுறையூடாக முன்னெடுத்து அதற்கான நீர் வடிகாலமைப்பை உருவாக்கித் தமது வர்த்தக நடவடிக்கைகளைப் பாதுகாத்து தருமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர், ஆகியோருடன் எமது பிரதேசத்தின் தவிசாளரான கருணாகர குருமூர்த்தியிடமும் கோரிக்கை விடுத்திருந்தோம்.

அந்தவகையில், தவிசாளர் குறித்த அதிகாரிகளை அழைத்து வந்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டுள்ளமையுடன் வடிகாலமைப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்.

அதேபோன்று நகரின் மத்திய பகுதியில் காணப்படும் பஸ் தரிப்பு நிலையத்தால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு வருவதுடன் விபத்துக்களும் ஏற்படும் ஏதுநிலை காணப்படுகின்றது.

அந்தவகையில் குறித்த பஸ் தரிப்பு நிலையத்தையும் கடந்த காலங்களில் இருந்த இடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கையையும் நகரின் அபிவிருத்தியின் போது கவனத்திற் கொண்டு விபத்துக்களையும் இடையூறுகளையும் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை செய்து தருமாறும் சுட்டிக்காட்டியுள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவித்திருந்த தவிசாளர் மேலும் கூறுகையில்,

வர்த்தகர்களின் கோரிக்கைகள் நியாயமானவைதான். அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது மக்களுக்கு இடையூறாக உள்ள பிரச்சினைகள் அனைத்தும் கவனத்திற் கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதே போன்று பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கான இடம் தொடர்பில் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. அது தொடர்பில் தொடர்ந்தும் ஆலோசித்து வருகின்றோம் என்றும் தெரிவித்திருந்தார்.

முன்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சி காரணமாக தீவகத்தின் மையப் பகுதியான வேலணையின் வங்களாவடி நகரப்பகுதியை பல்பரிமான நகரமாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தது. சுபீட்சத்தின் நோக்கு திட்டத்துக்கமைய நாட்டில் 100 நகரங்களை பல்பரிமான நகரத் திட்டமாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைவாக பெருநகர அபிவிருத்தி அமைச்சு இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்த முயற்சி காரணமாக யாழ் மாவட்டத்தில் வேலணை நகரப் பகுதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2021

“குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப்போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்.”

- தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)



காலைக்கதிர் Kalaikkathir

# அரசுக்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கியதன் விளைவை மக்களே அனுபவிக்க நேரிட்டுள்ளது

## மினுவாங்கொடையில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



அரசாங்கத்துக்கு எல்லையற்ற அதிகாரத்தை வழங்கியதன் எதிர் விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு எமது நாட்டு அப்பாவி மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதன் அழுத்தத்தை ஒட்டு மொத்த நாட்டு மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மக்களின் இதயத்துடிப்பை புரிந்துகொள்ளாத மக்கள் படுகின்ற எல்லையற்ற துன்பங்களைக் கண்டு திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்ற ஓர் அரசாங்கமே இன்று நாட்டில் இருப்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்களின் தேவையையும் கவலையையும் புரிந்துகொள்வதற்குப் பதிலாக அரசாங்கம் தூதரகத்திற்க்கு முன் மண்டியிட வேண்டியநிலையேஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் தன்னிச்சையான வேலைத்திட்டத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் மினுவாங்கொடை அமைப்பாளர் சமிந்த டி சில்வாவின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கடந்த வியாழக்கிழமை மினுவாங்கொடை நகர மத்தியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் ரணதுங்கவும் இதன் போது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டமை சிறப்பம்சமாகும். இந்த நிகழ்வில் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா உட்பட மக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜோர்ஜ் பெரேரா, ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் தனவர்தன குருகே உட்பட பொதுமக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# தென் அந்தமானில் குறைந்த அழுத்தப் பிரதேசம் மீண்டும் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள்?

புதிதாக ஒரு குறைந்த அழுத்தப் பிரதேசம் தென் அந்தமான் கடற்பரப்புகளுக்கும் அண்மையாகவுள்ள கடற்பரப்புகளுக்கு மேலாகவும் நாளை உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு கிழக்காக உள்ள ஆழம் கூடிய கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இந்த விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன், காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.5 - 3.0 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யுகதனவி மின்னுற்பத்தி நிலைய ஒப்பந்தம் நீதியரசர்கள் ஆயத்தின் முன் விசாரிக்குக!

## சட்ட மா அதிபர் கோரிக்கை முன்வைப்பு

யுகதனவி மின்னுற்பத்தி நிலைய ஒப்பந்தத்துக்கு எதிராகதாக்கல்செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை பூரண நீதியரசர்கள் ஆயத்தின் முன்நிலையில் விசாரிக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உயர்நீதிமன்றத்திடம் சட்ட மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி, குறித்த மனு நேற்று (வெள்ளிக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, சட்ட மா அதிபர் சார்ப்பில் ஆஜரான மேலதிக செலிஸிட்டர் ஜெனரல் பர்ஷான ஜமீலினால் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவது தொடர்பான அமைச்சரவையின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் மனுக்கள்தாக்கல்செய்யப்பட்டுள்ளன. அதன்படி, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் எல்லே குணவங்ஸ தேரர் ஆகியோர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். அதன் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டுத் திடல் திறப்பு!







**கலையமுதன்**

யாழ்ப்பாணம்,நவ.12

நவீன வசதிகளுடன் 5 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விளையாட்டுத் திடல் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களின் பிரித்தானியக் கிளையின் நிதிப்பங்களிப்பில்உருவாக்கப்பட்ட இந்த மைதானம் சம்பிரதாய பூர்வமாக நேற்று கல்லூரி நிர்வாகத் திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ரட்ணம் செந்தில் மாறன், கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் ஜெயபிரகாஷ், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இலத்திரனியல் ஸ்கோர்போட், கழக மனை, பயிற்சிகளுக்கான இடம் போன்றன இந்தத் திடலில் உள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த விளையாட்டுத்திடல் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலேயே மிகவும் நவீனகரமான ஒரு மைதானமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மைதானத்தில் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மோதும் 19 வயதிற் குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 190

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



இலங்கை - இந்திய ஒப்பந்தம்

**481. அத்திபாரங்கள் எப்படி அமைய வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

தமிழ் மக்களின் அத்திபாரம் இந்தியாவின் நட்புறவிலும் அரவணைப்பிலும்தான் இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். சுவடுகளைப் பின்னோக்கிப் பார்த்தாலும், இப்பொழுது உள்ள நிலையிலிருந்து முன்னோக்கி தூரநோக்கில் பார்த்தாலும், இந்தியாவை விலத்தி அல்லது வெட்டி ஓட நினைக்கும் தமிழ் மக்களின் அரசியல் ஒருபோதும் அவர்களுக்கு ஒரு நீதியான - நிலையான - தீர்வைத் தரப்போவதில்லை.

1987 இல் இந்தியா ஒப்பந்தத்தின் மூலம் இந்தியப் படைகளை ஸ்ரீலங்காவில் இறக்கியபோது அவர்கள் ஜே.ஆரையும், அவரைத் தொடரக்கூடிய தலைவர்களையும், சிங்கள மக்களையும், அவர்களது போக்குகளையும் எடைபோட்டு தூரநோக்கில் தான் இயங்கினார்கள். அதில் அவர்கள் தமிழ்மக்கள் எப்பொழுதும் தம்முடனே ஆதரவாக இருப்பார்கள் எனக் கணக்கிட்டார்கள். தமிழ் மக்கள் தங்களது குடும்பமெனவும் 'சிங்களம்' மாற்றான் எனவுமே அந்நியோன்னியத்தில் கணித்தனர். ஆனால் நடந்தது வேறு.

அதன் சமாந்தரம் போல, துருக்கி பேசும் மக்களுக்காக சைபிரஸுக்குள் - கிரேக்கம் பேசும் பெரும்பான்மை மக்களுக்கு எதிராக - துருக்கியின் படைகள் உள்ளிட்டமையைப் பார்க்கலாம்.

சைப்பிரஸும் கிரேக்கம் பேசும் மக்களுக்கும் அவர்களுக்கு ஆதரவான



சௌமியமூர்த்தி தொண்டமான்

நாடுகளும் துருக்கிப் படைகள் வெளியேற வேண்டுமென போராடுகின்றன. 50 வருடங்களாக துருக்கியும் அங்கு நிலை கொண்டுள்ளது. துருக்கி பேசும் மக்கள் கேட்கும் - ஏற்றுக்கொள்ளும் - ஒரு நீதியான தீர்வின் பின் அவர்கள் கேட்க தாம் வெளியேறுவோம் எனத் துருக்கி அறிவிக்கிறது. துருக்கி இராணுவம் அங்கு நிலை கொண்டுள்ளதால் சைப்பிரஸைப் பற்றிய எந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையும் ஐ.நாவின் ஈடுபாட்டோடு சர்வதேச பரப்பிலேயே நடக்கின்றது. இடைப்பட்ட நாள்களில் சைப்பிரஸின் துருக்கி பேசும் மக்கள் சுய ஆட்சி மாநிலமாக வளர்ந்து சுபிட்சமாக வாழ்கிறார்கள். அரசியல் தீர்வு தங்கள் அபிலாஷைக்கு ஏற்ப வரும்என்றநம்பிக்கைஅவர்களுக்கு.

தமிழ் மக்களோ தாங்கள் இந்திய ஒப்பந்தத்தோடு இந்தியப் படைகள் காலூன்றிய காலத்திலிருந்து தங்களை கொஞ்சம் கொஞ்சமாக ஒற்றுமையீனத்தாலும் தீர்க்கமான வழிகள் தெரியாமலும் சுலோகங்களை உச்சரித்து, பலவீனப்படுத்தி, யாராவது அட்சதை கொடுத்தால் கையை நீட்டுவதற்கு நிற்கிறார்கள். 33 வருடங்களின் பின் இந்தியாவிடம் போய் அப்பொழுது கிடைத்த 13 ஆவது திருத்தத்தை அமுல் நடத்தக் கேட்கபோவதிலேயே குளறுபடிகளும் ஒற்றுமையீனமும் தெரிகிறது. இங்கு போவதா? அங்கு போவதா ? ஆங்கிலம் தெரிந்தவர் முன்னெடுப்பதா? சட்டத்தரணிகள் போவதா? அரசியல் அறிவு கொண்டவர் போவதா? - என்றெல்லாம் அபிப்பிராய பேதங்கள்.

இதைப்பற்றி ரெலோ முன்னெடுத்துக் கூட்டிய கூட்டத்தின் பின் மனோ கணேசனின் நண்பர்களின் வட்ஸ் அப் குழுமத்தில் இடப்பட்ட பதிவுகளுக்கு பதிலாக இட்ட செய்தியை முழுமையாகவே தருகிறேன். அதனை எனது நண்பரோடு பகிர்ந்தபோது அதனை அவரது ரெலோ நண்பரோடு பகிர அவர் ஒரு கருத்தை வைத்தார். அதனை நாளை பார்ப்போம்.

இதுதான் அந்தச் செய்தி:-

ரெலோவின் ஏற்பாட்டில் நடந்த கூட்டத்தின் பின், இதில், இடப்பட்ட இரண்டு பதிவுகள் என் கண்களை அகலத்திறந்து மீண்டும் பார்க்க வைத்தன. ஒன்று - இந்திய வம்சாவளியினரை பற்றியதாகவும் அது ஒப்பந்தத்தில் எப்படி கையாளப்பட்டது எனவும் கேட்டது.

அந்த நாள்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆளுமை மிக்க தலைவராக இருந்தார். அவர் இந்திய வம்சாவளித் தமிழர் மட்டுமல்ல, வட, கிழக்கு தமிழர்களின் தலைவர்கள் 1983 இன் பின் இந்தியாவிலிருந்த போது, தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவு கவனித்தவரும் கூட. இந்திரா காந்தி பார்த்தசாரதியின் ஊடாக நடத்திய பேச்சுவார்த்தைகளில் விநியோகிக்கப்பட்ட தீர்வு பற்றிய இணைப்பு C அவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவர் அப்பொழுது இருந்த மிகுதி இந்திய வம்சாவளியினருக்கும் இலங்கை குடியுரிமை தரப்பட வேண்டும் என்ற சமர்ப்பணத்தை சர்வ கட்சிகளின் மகாநாட்டில் முன் வைத்தார். அதன் பின்னர், அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டு, அமுல்படுத்தப்பட்டது. அது அவரின் சாணக்கியத்திற்கு சாட்சி.

இலங்கைத் தமிழர் பற்றி ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டவையெல்லாம், ஜே.ஆரோடு வாதாடி இந்தியாவினால் இணைக்கப்பட்டவையேயொழிய, சர்வகட்சி மகாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையல்ல.

அதையொட்டி வந்த மற்றைய பதிவு, மேற்படி கூட்டத்தில் பங்கு பற்றிய ஒருவரிடமிருந்து வந்தது என அனுமானிக்கிறேன்.

13 ஆம் திருத்தம் ஒரு அர்த்தமுள்ள அதிகாரப்பரவல். எந்தப் பெயரில் அதை அழைத்தாலும் அது கூட்டாட்சியின் (Federalism) அரசியல் சாயலே.

அதிகாரப்பரவலுக்கான 13 ஆம் திருத்தத்தில் சில நல்ல அம்சங்கள், அதில் எழுத்திலாவது உண்டு. அதன் சரிவுக்கு காரணமானவை, அது பலமான ஒற்றையாட்சி அமைப்பில் சேர்க்கப்பட்ட ஒட்டு. சர்வ அதிகாரங்களையும் ஒரு பகுதியின் கையில் தந்த அரசியலமைப்பின் நியமன அதிகாரியாக ஆளுநர், வடக்கு - கிழக்கு இணைப்புக்கு விதிக்கப்பட்ட கால எல்லை போன்றவை இதனை சரித்தன. இந்த இணைப்புக்கு இந்தியா உதவி செய்ய வேண்டும். 13 ஆம் திருத்தத்தில் தரப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறாது இருக்கக்கூடிய வழியில், அதிகாரங்கள் மாற்றப்படாமலிருக்க அழுத்தம் தரவேண்டும் என்ற விதத்தில் அந்தப் பதிவு இருந்தது.

தேர்தல் அரசியலை குறிவைத்து குளத்தில் நீந்தும் மீன்கள் தங்களை திமிங்கலங்களாக எண்ணி நீச்சலடிக்கலாம். ஆனால் கடல்பரப்புக்கு வரும் போது, தாங்கள் மீன்கள்தான் என உணர்ந்து கொள்ள வேண்டும்.

13 ஆவது திருத்தம் இலங்கை.- இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிறந்த குழந்தை. இலங்கை ஒரு பல்லின மக்கள் வசிக்கின்ற நாடென்பதையும், அங்கு காலம் காலமாக வாழும் தமிழ் - முஸ்லிம் மக்களின் பாரம்பரிய தேசமாக வடக்கு கிழக்கு, கருதப்பட்டு, இணைக்கப்பட்டு, அவர்களால் தெரியப்பட்டவர்களால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதை முக்கியமாக தெளிவாக்கியது. அவை 13 ஆம் திருத்தத்திலே அடக்கப்பட்டன. ஆகவே இது ஏதோ அதிகாரப்பரவலல்ல. ஒப்பந்தத்தில் ஏற்கப்பட்டவற்றை உரிமைகளாகக் கையளித்தது. இரண்டிலும் சோறு இருப்பதால் Fried Riceயும் புளியோதரையும் ஒன்று என்பது போல் பார்க்கக் கூடாது.

இருக்கிற குளறுபடிகள், 13 இல்



ரவூப் ஹக்கீம்

இல்லை, ஏனெனில் அது இந்தியாவால் அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனுசரணையுடன் எழுதப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க )

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**கேள்வி:-** ஆணாதிக்கம் நீங்கும் என்று நினைக்கிறீர்களா?

**பதில் :-** நீங்கக் கூடாது என்று நினைக்கிறேன். ஒரு நிர்வாகம் சிறக்க வேண்டுமானால் அதில் ஆள்பவர், ஆளப்படுபவர் என இருவகையானோர் இருத்தல் அவசியம். அங்ஙனமன்றேல் அந்த நிர்வாகம் சீர்குலைந்துவிடும். அடுத்து ஆள்பவராய் யார் இருப்பது? ஆளப்படுபவராய் யார் இருப்பது? - எனும் கேள்வி பிறக்கும். அவரவர் தகுதிகொண்டே அந்த விடயத்தைத் தீர்மானிக்க வேண் டும் என்பதே பதிலாம்.

ஆளப்படுவோரை விட ஆள்பவரின் பொறுப்பே ஒரு நிர்வாகத்தில் அதிகமாம். நிர்வாகத்தில் நிகழும் சரி, பிழைகளுக்கு அவரே பொறுப்பேற்றல் வேண்டும். அதனால் ஆள்பவர் ஆளப்படுவோரை ஆதிக்கம் செலுத்தும் வல்லமை உடையவராய் இருத்தல் தவிர்க்க முடியாததாகிறது. செலுத்துகிற சாரதியின் ஆற்றலைக் கொண்டே செல்கின்ற வாகனத்தின் சிறப்பு நிகழும். சாரதியின் கை நழுவுமானால் வாகனம் விபத்துக்கு ஆளாவது நிச்சயமாம்.

கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் நான் ஏதேதோ சொல்வதாய் நீங்கள் நினைப்பீர்கள். இனி உங்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறேன். ஆண், பெண் இணைந்த குடும்ப நிர்வாகத்திலும் மேற் சொன்னவை உண்டு. அங்கும் ஒருவர் ஆள்பவராகவும் மற்றவர் ஆளப்படுபவராகவும் இருந்தால்த்தான் குடும்ப நிர்வாகம் சிறக்கும். ஆண், பெண் இருவரில் எவர் ஆளும் தகுதியோடு இருக்கிறார்? எவர் ஆளப்படும் தகுதியோடு இருக்கிறார்? என்பதை வைத்தே குடும்பத் தலைமை வழங்கப்படுதல் அவசியம்.

> ‘‘தகுதிகளை ஆராய்ந்து பார்க்கும் போது, ஆணே ஓர் குடும்பத்தில் ஆளும் தகுதிபெற்ற தலைவனாய் ஆகமுடியும்.’’

இயற்கை அமைப்பில் பெண் உணர்வு சார்ந்தவள். அதனால் அவளிடம் ஸ்திரத்தன்மை எப்போதும் குறைவாகவே இருக்கும். அதுமட்டுமன்றி அவளது உடல் அமைப்பும் மென்மை சார்ந்ததாய் அமைந்திருப்பதால் அவளால் வலிமையான பகைகளை எதிர்கொள்ளுதல் முடியாது. ஆணின் அமைப்பு இதற்கு நேர்மாறானது. அவன் பெண்ணைவிட அறிவு சார்ந்தவனாகவும், உடலால் வன்மை பெற்றவனாகவும் இயற்கையாய் அமைக்கப்பட்டுள்ளான். இத் தகுதிகளை ஆராய்ந்து பார்க்கும் போது, ஆணே ஓர் குடும்பத்தில் ஆளும் தகுதிபெற்ற தலைவனாய் ஆகமுடியும் என்பது தெளிவாகிறது.

நான் இதைச் சொன்னதும் அறிவு சார்ந்த ஆளுமை பெற்ற ஒருசில பெண்களை எடுத்துக் காட்டி என்னோடு நீங்கள் சண்டைக்கு வருவீர்கள். விதி என்ற ஒன்று இருந்தால் விதிவிலக்கு என்ற ஒன்று இருக்கத்தான் செய்யும். நீங்கள் சொன்னவர்கள் எல்லாம் விதிவிலக்கானவர்கள். சிறுபான்மையாய் இருக்கும் அவர்களை வைத்துப் பெரும்பான்மையினோருக்கு விதி சமைக்க முடியாது. அதனால் உங்கள் கருத்து நிராகரிக்கப்படுகிறது.

இன்று பெண் விடுதலைக்காரர்களினால் உசுப்பேற்றப்பட்டு, தம் நிலை உணராது, இயற்கைக்கு முரணாக, தம்மை வலிமையாய்க் காட்டித் தமக்கும் ஆளும் திறமை உண்டு என்று சில பெண்கள் உலகத்தையும் தம்மையும் ஒருமித்து ஏமாற்றி வருகிறார்கள். ஆள்பவராய்த் தம்மைக் காட்டிக்கொள்ளும் அவர்களின் பொய்முகம் தக்க தருணங்களில் கலைந்து போகும். அதனால் அவர்கள் மட்டுமன்றி அவர்களின் குடும்பமும் பாதிக்கப்படும். அதனால்தான் நம் தமிழ் மூதாதையர்கள் குடும்பத் தலைவனாய் ஆணையே ஏற்றுக் கொண்டனர். தலைவனான அவனிடம் ஆதிக்கத் தன்மை இருப்பது தவிர்க்கமுடியாதது மட்டுமன்றி அவசியமும் ஆகிறது. அதனால் தான் ஆணாதிக்கம் அவசியம் என்கிறேன்.

> ‘‘நம் தமிழ் மூதாதையர்கள் குடும்பத் தலைவனாய் ஆணையே ஏற்றுக் கொண்டனர். தலைவனான அவனிடம் ஆதிக்கத் தன்மை இருப்பது தவிர்க்கமுடியாதது மட்டுமன்றி அவசியமும் ஆகிறது. அதனால்தான் ஆணாதிக்கம் அவசியம்.’’

உண்மையை உணர்த்துவதற்காகக் ‘கொச்சையாய்’ ஒன்றைச் சொல்லிப் பதிலை முடிக்க வேண்டியிருக்கிறது. ஆணாதிக்கம் வேண்டாம் என்கின்ற பெண்கள் எல்லா விடயத்திலும் அதைச் சொல்ல முன் வருவார்களா? ஆதிக்கம் செய்யமுடியாத ஆணால் ஒரு பெண் திருப்தியடைய முடியுமா? (நான் எதைச் சொல்கிறேன் என்பது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.)

**உலகநாதரின் ஒப்பீனியன் * சீய்ய்ய்... வாரிதியார் வரவர செக்ஸாப் பேசுறார்.**

**எனக்கு வெக்கம் வெக்கமா வருகுதுங்கோவ்வ்வ்**

**கேள்வி:-** நம்முடைய தற்போதைய ஜனாதிபதி செய்த தவறுகளை வரிசைப்படுத்துங்கள் என்று கேட்டால், அதில் முதல் தவறாய் எதைச் சொல்வீர்கள்?

**பதில் :-** பிழைகளின் வரிசை மிக நீண்டது. இன்னும் நீள்கிறது. முதல் பிழை என்று கேட்டதால் சொல்கிறேன். தேர்தலில் தன்னை வெற்றிபெறச் செய்த சிங்கள, பௌத்த மக்களின் நலன் நோக்கிச் செயற்படுவேன் என்னும் கருத்துப்பட அன்று அவர் பேசியதே, ஜனாதிபதியானதும் அவர் விட்ட முதல் பிழையாய் எனக்குத் தோன்றுகிறது. ஒரு ஜனநாயக நாட்டில் இக்கூற்று மிக மிகத் தவறானது. ஜனநாயக ஆட்சியில் தேர்தல் நடைபெறும் வரைதான் வாக்களிக்கும் ஆதரவாளர்களினதும் தனது கட்சியினதும் தலைவராய் ஒருவர் இருப்பார். தேர்தலில் வெற்றி பெற்றபின் அவர் அனைத்து மக்களினதும் தலைவராய்த் தன்னைக் கருதல் வேண்டும். இந்நிலை தவறின் ஜனநாயகம் தோற்றுவிடும். அதனால்தான் ஜனாதிபதியின் அப்போதைய அக்கூற்றினை முதல் தவறு என்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இலங்கையில் ஜனநாயகமா? இந்தக் கிண்டல்தானே வேண்டாம் என்கிறது.**

**கேள்வி:-** பக்றீரியாக்களுடன் அனுப்பப்பட்ட சீனாவின் இயற்கை உரத்தைத் திருப்பி அனுப்பியமைக்காகச் சீனாவின் நிறுவனம் ஒன்று இலங்கையிடம் 80 லட்சம் அமெரிக்க டொலர்களை நஷ்டஈடாகக் கேட்டு இருக்கிறதே?

> ‘‘எந்நேரமும் இலங்கையில் பொருளாதார வெடிப்பொன்று நிகழலாம்.’’

**பதில் :-** சீனா தன் சுயரூபத்தை மெல்லமெல்லக் காட்டத் தொடங்கிவிட்டது. இதனை முன்னரே நான் சொல்லியிருக்கிறேன். மக்கள் வங்கியைத் தனது கறுப்புப் பட்டியலில் சேர்த்ததில் தொடங்கி, இன்று நஷ்டஈடு கேட்டிருப்பது வரையான செயல்கள் அதனைத்தான் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. திருப்பி அனுப்பிய கப்பலை வேற்றூருக்குக் கொண்டு சென்று பெயின்ற் மாற்றி, பெயர் மாற்றித் திருப்பி இங்கு கொண்டுவந்த சீனாவின் செயலில் தன் வெற்றிக்காக அது என்னவெல்லாம் செய்யும் என்பது தெரிய வந்திருக்கிறது. பிராந்திய அரசியலில் மறைமுகமாய்த் தலையிட் டிருக்கும் மற்ற வல்லரசுக் ‘கணவர்களின்’ பலத்தை மறந்து, சீனக் கணவருக்கு மட்டும் தன் கற்பைக் காட்ட நினைத்தது இலங்கை. இன்று அதன் மற்றைக் கணவர்கள் நெருக்கடி செய்யத் தொடங்க அதன் நிலை இரண்டுங்கெட்டானாகி இருக்கிறது. இலங்கை யைக் காசுக்கு வாங்கிய கணவனான சீனா, அந்தக் காசைக் கொண்டே அதனை அடிமை கொள்ளப்பார்க் கிறது. இலங்கையின்பாடு இனிச் சங்கடம்தான். மற் றவர்களின் உரிமையைப் பறிக்கப் பார்த்து, இன்று தன் உரிமையை இழக்கத் தொடங்கியிருக்கிறது சிங்கள அரசு. இதில் தமிழர்களாகிய நாமும் நட்டப்படத் தான் போகிறோம். வெகுசீக்கிரத்தில் வேறு பல ‘திறில்’ காட்சிகளும் அரங்கேறுவதை நாம் காணக்கூடியதாய் இருக்கும் என்றே நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘ஒருவனைப் பற்றி ஓரகத்திரு’ ஹி.. ஹி..**

**கேள்வி:-** ஈழத்தமிழர்கள் பிரச்சினையைப் பற்றிப் பேச அமெரிக்காவின் அழைப்பின் பேரில் சம்பந்தர் ஐயா மூவரை அனுப்பி வைக்கப் போகிறாராமே?

**பதில் :-** பார்த்தேன், படித்தேன். இந்தச் செய்தியை வைத்துப் பல விடயங்களைக் கணிக்க முடிகிறது. அவற்றைத் தனித்தனியாய்க் கீழே குறிப்பிடுகிறேன்.

> ‘‘ஆயிரம்தான் மற்றைக் கட்சிகள் ‘தலைதலையாய்’ அடித்துக் கொண்டாலும் உலக அரங்கில் ஈழத்தமிழர் விடயத்தில் இன்றைக்கும் கூட்டமைப்புத்தான் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.’’

* இலங்கையை அமெரிக்கா வெளிப்பட மிரட்டத் தொடங்கியிருக்கிறது என்பது ஒன்று.

* இலங்கை விடயத்தில் சீனாவைக் கட்டுப்படுத்த இந்தியாவோடு அமெரிக்கா கூட்டுச்சேரத் தொடங்கிவிட்டது என்பது இன்னொன்று.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மெல்லப் பறிபோகின்றன மாகாண அதிகாரங்கள்!




## சுகாதார அமைச்சும் கைவிட்டு போகுமா?

1987 ஜூலை 29 இல் கையெழுத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் படி அதே ஆண்டு நவம்பர் 14 இல் இலங்கை நாடாளுமன்றம் தனது அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது. 1988 பெப்ரவரி 3 இல் எட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

இலங்கையில் மாகாண சபைகள் என்பவை இலங்கை மாகாணங்களுக்கான சட்டவாக்க அவை ஆகும். நாடாளுமன்றத்துக்கு அடுத்ததாக மாகாணங்களை ஆட்சியமைக்கும் - தமது மாகாண நிர்வாகத்தை - அந்த மாகாண ஆட்சி மொழி - பெரும்பான்மை சமூகம் - எது உள்ளதோ அந்த மக்களைத் தாமே நிர்வகிக்கும் உயரிய அவை மாகாண சபை ஆகும். இலங்கை அரசமைப்பின் படி, மாகாண சபை, குறிப்பிட்ட மாகாணத்தின் வேளாண்மை, கல்வி, சுகாதாரம், வீடமைப்புத் திட்டம், உள்ளூராட்சிகள், சாலைவழிப் போக்குவரத்து, சமூக சேவை போன்றவற்றின் நிர்வாகங்களை நிர்வகிக்கும். இவற்றை விட பொலிஸ் அதிகாரம், காணி போன்றவற்றுக்கும் அரசமைப்பின் படி இதற்கு அதிகாரங்கள் உள்ளன, ஆனாலும் மத்திய அரசு இவற்றுக்கான அதிகாரங்களை மாகாண அரசுக்கு வழங்க மறுத்து வருகின்றது. இன்றுவரை அது தொடர்கதையாகவும் 13 ஆம் திருத்தத்துக்கு அமைவாகக் கிடைக்கப்பெற்ற அதிகாரங்களை முழுமையாகப் பெற்று 13 இற்கு அப்பால் சென்று அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பது தொடர்பாக எமது அரசியல் தலைமைகளின் போராட்டம் தொடர்கதையாக உள்ளது.

1987 ஆம் ஆண்டு 8 மாகாண நிர்வாகம் காணப்பட்டது. வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணமாக தமிழர் தாயகப் பிரதேசங்கள் காணப்பட்டன. ஆனால், 2006 ஜூலை 14 இல் மக்கள் விடுதலை முன்னணி, கிழக்கு மாகாணத்துக்கெனத் தனியே மாகாணசபை நிறுவப்படவேண்டும் என இலங்கை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அந்த வழக்கு விசாரணையை அடுத்து ஜனாதிபதி ஜயவர்தனாவால் அறிவிக்கப்பட்ட இணைப்பு சட்டவிரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 ஒக்ரோபர் 16 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை அடுத்து 2007 ஜனவரி முதலாம் திகதி வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை வட மாகாண சபை, கிழக்கு மாகாண சபை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு 13 இற்கு அமைய தமிழர் தாயகத்துக்குக் கிடைக்கப்பெற்ற அதிகாரங்கள் மெல்லப்புடுங்குகின்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது சுகாதார அமைச்சையே இல்லாதொழிக்கின்ற - மாகாணங்களுக்குரிய சுகாதார அமைச்சை முழுமையாக மத்தி கையகப்படுத்துகின்ற - மாகாண சுகாதார அமைச்சின் கீழ் வருகின்ற சகல திணைக்களங்களையும் மத்தி புடுங்கியெடுக்கும் செயற்பாடு - கைங்கரியம் திரைமறைவில் அரங்கேற ஆரம்பித்துள்ளது. கறையான் மெல்லமெல்லக் குடைந்து துவம்சம்செய்வது போன்று மாகாண அதிகாரங்கள் மெல்ல மெல்ல அரிக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் ஆக்கப்பட உள்ளன. சகல மாகாணங்களுக்கும் இது பொதுவான ஒரு நிலைமை என்றாலும், இதனால் பெரிதும் பாதிக்கப்படப்போகின்றவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சிறுபான்மையினரே!

வடக்கு, கிழக்கில் பல தரம் - 1 - 1ஏபி - பாடசாலைகள் தேசியப்பாடசாலைகளாக மாற்றம்பெற்றன. மாகாணக் கல்வி அமைச்சின் கீழிருந்த பல உயர் சாலைகள் மத்தியிடம் சென்றன. ஆனால், கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் பெரிதான மாற்றமோ - மறுமலர்ச்சியோ - எதுவும் இதனால் ஏற்படப்போவது கிடையாது. பெற்றோர்கள் வெறும் பெருமைக்காக 'எனது பிள்ளை தேசியப்பாடசாலையில் கல்வி கற்கின்றது' என்றும், ஆசிரியர்கள் வெறும் புகழுக்காக 'நான் தேசியப் பாடசாலை ஆசிரியர்' என்றும் பீற்றிக்கொள்வதுதான் கிடைக்கும் பலன்.

தற்போது சுகாதாரத்துறை வெறிதாக்கப்படுகின்றது. வடக்கில் 2013 ஆம் ஆண்டு முதலாவது மாகாண மக்களாட்சி உருவாக்கப்பட்டது. முதலாவது சுகாதார அமைச்சராக வைத்தியர் ப.சத்தியலிங்கம் நியமிக்கப்பட்டார். அந்த மாகாணசபை மக்களுக்கு உருப்படியாக எவையும் செய்யவில்லை என்று குறைகூறப்பட்டாலும், மாகாணத்தில் இருந்த அமைச்சர்களுள் ஓரளவுக்கு சுகாதார நியதிச் சட்டங்களை உருவாக்கி, புலம்பெயர் அமைப்புகள் ஊடாக நிதிமூலங்களைப் பெற்று ஏராளமான ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் வைத்தியர் ப.சத்தியலிங்கம். காரணங்கள் ஏதுமின்றி முதலமைச்சரின் தன்னிச்சையான செயற்பாட்டால் அவர் பதவி பறிக்கப்பட்டார். தமிழர்கள் நிர்வாகத் திறன் அற்றவர்கள். கிடைத்த சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அவை சரியாகவும் இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம். அதுவேறு. அதற்காக எமக்குரிய அதிகாரங்களை மத்திக்கு தங்கத்தாம்பாளத்தில் வைத்து தாரைவார்க்க முடியாது.

பொதுச் சுகாதாரம் வடபகுதியில் மிகவும் சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்றது. வைத்தியர் ப.சத்தியலிங்கம் வடக்கின் சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் பொதுச்சுகாதாரம் தொடர்பில் முறையான கட்டமைப்பை உருவாக்கி, சிறப்பாக வளப்படுத்தினார். ஆனால், மத்தியிடம் சென்றால் இந்தக் கட்டமைப்பு தற்போது உள்ளமை போன்று நடைபெறும் என்பது கேள்விக்குறியே!

சில வைத்தியர்களின் நிலைப்பாடு பொதுச் சுகாதாரம், பிரதேச வைத்தியசாலைகள், மருத்துவமனைகள் என்பவற்றை விடுத்து மாவட்டப் பொது வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள் என்பவற்றை மத்தி கையகப்படுத்தலாம் என்பதே. இது வளமான பாடசாலைகளை மத்தி எடுத்து, சாதாரண வித்தியாலயங்களை மட்டும் நிர்வகிப்பை மாகாணத்துக்கு விட்டு கல்வி அமைச்சை பயனற்றதாக்கிய நிலைப்பாட்டுக்கு ஒப்பாகும்.

வைத்தியசாலைகளை மத்தி கையகப்படுத்துவதால் எந்த நன்மையும் கிடையாது. அவ்வாறு கையகப்படுத்துவதென்றால் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை போன்றவற்றை தனியான நிர்வாகி, தனியான கட்டமைப்பின் கீழ் போதனா வைத்தியசாலையாக உருவாக்கட்டும். இது பாரிய நன்மையை ஏற்படுத்தும். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வளர்ச்சிக்கு இது உறுதுணை யாக அமையும். தற்போது தனிப் பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்ட வவுனியா பல்



கலைக்கழகத்திலும் மருத்துவபீடத்தை உருவாக்க இது ஏதுவாக இருக்கும். மன்னார் மாவட்ட பொது வைத்தியசா லையை மாகாணப் பொது வைத்தியசாலையாகமாகாண நிர்வாகத்தின் கீழ் தரமுயர்த்தட்டும். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை என்பவற்றை மாவட்டப் பொது வைத்தியசாலையாக மாகாண நிர்வாகத்தின் கீழ் உருவாக்கட்டும். சுகாதாரத்துறை பரந்துபட்டு கிராமப் புற மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க இது ஏதுவாக அமையும்.

9 மாகாணங்களில் இரு மாகாணங்களில்தான் சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். ஏனைய ஏழு மாகாணங்களுக்கும் - குறிப்பாக அந்த மாகாண மக்களுக்கு - மத்தி நிர்வகிப்பதோ, மாகாணம் நிர்வகிப்பதோ பெரிய தாக்கம் ஏதுமில்லை. ஆனால், வடக்கு, கிழக்கில் இது பாரிய பிரச்சினை. மாகாண நிர்வாக அதிகாரம் என்பது எமக்குக் கிடைத்த உரிமை. தமிழர் வாழும் இந்தப் பிரதேசங்களில் ஆட்சிமொழியாக தமிழ் இருக்கவேண்டும். எமது மக்களின் வலிகளை உணர்ந்த, அவர்களின் தேவைகளைப் புரிந்த எமது மொழி பேசுபவர்தான் எம்மை ஆளவேண்டும். எமது நிர்வாகத்தை நிர்வகிக்க வேண்டும். அவர் நிர்வாகத் திறன் உடையவரோ இல்லையோ என்பது பிரச்சினை இல்லை.

சுகாதாரத்துறையை முழுமையாக மத்தி எடுத்துக் கொண் டால், பெரும்பாலும் அரச நிர்வாகத்தில் மத்தியிலுள்ள பெரும்பான்மையினத்தவர்களே காணப்படுவர். மொழி பாரிய பிரச்சினையாக இருக்கும். ஆட்சிமொ ழியாக சுகாதாரம் சார்ந்த விடயங்களுக்கு சிங்களமே பயன்பாட்டில் அமையும். சரி, ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு காணப்பட்டாலும் அதனைப் புரிந்து, பதில ளிக்கும் தகைமை சுகாதாரத் துறையில் பணியாற்றும் பலருக்குக் கிடையாது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மத்தியின் கீழ் சுகாதாரத்துறை முழுமையாக வருவதை விரும்பலாம். அது அவர்களுக்கு தமது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள இலகுவாக அமையலாம். அவர்கள் முழுத்தீவில் ஓரிருவருடன் மட்டும் தொடர்பை ஏற்படுத்துவதனூடாக தமது பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வைக் காணக்கூடியதாக இருக்கும்.

ஆனால், வடக்குக் கிழக்கில் உள்ள அவர்களின் கிளை அமைப்புகள் இதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. சமூகத்தில் உயரிய அறிவும் சிந்தித்து தெளிவான முடிவெடுக்கும் ஆற்றல் படைத்தவர்கள் வைத்தியர்கள். இனவிடுதலைப் போராட்டத்திலும் அளப்பரிய பங்கு இந்த உயரிய அறிவுடை சமூகத்துக்கே உண்டு. எத்தனையோ வலிகளைச் சுமந்து, இனம், தேசியம், சுயநிர்ணயம் என்று இன்று கிடைத்திருக்கின்ற மாகாண அதிகாரங்களை வலுப்படுத்துவதில் எமது இனம் போராடிக்கொண்டிருக்கின்றது. தொழில், தனிப்பட்ட சுயநலன்களுக்கு அப்பால் இந்த விடயத்தில் இனம் சார்ந்து சிந்தித்து செயலாற்றவேண்டும்.

தற்போது மாகாண நிர்வாகங்கள் முழு நாட்டிலும் இல்லை. மாகாணத்துக்குரிய சர்வ அதிகாரம் படைத்தவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அவரது பிரதிநிதியாகிய - அவரது கைப்பொம்மையாகிய - ஆளுநரே காணப்படுகின்றார். சகல மாகாணங்களுக்கும் தற்போது பதில் முதலமைச்சரோ, சுகாதார அமைச்சரோ, கல்வி அமைச்சரோ அந்த மாகாண ஆளுநர். அவரை நியமித்தவர் ஜனாதிபதி. அவர் 'எள் என்றால் எண்ணெய் ஆக நிற்பவர்'களைத்தான் ஜனாதிபதி எப்பவும் ஆளுநராக நியமிப்பார். அதுவும், வடக்குக் கிழக்குக்கு இதற்கும் மேலாகவுள்ள தன் ஆத்மார்த்த விசுவாசியைத்தான் நியமிப்பார். அவர்கள் ஜனாதிபதி கையெழுத்து வை என்றால் ஏன், எதற்கென்றில்லாமல், வாசித்து, விளங்கி, புரிந்துகொள்ளாமல் கையெழுத்திடுவார்கள். இதுதான் எமது மக்களாட்சியில்லாத மாகாண நிர்வாகத்தின் தற்போதைய நிலைமை.

ஆகவே, இந்த விடயத்தில் மக்கள் பிரதிநிதிகளும், அரசியல் தலைமைகளும் தம்மைச் சுதாகரித்து, தமது கட்சிபேதங்கடந்த ஒற்றுமையூடாக திரட்டிய பலத்தினூடாகத்தான் இவற்றை முறியடிக்கமுடியும். செய்து எம் இருப்பைக் காப்பாற்றுவார்களா நம் தலைவர்கள்?

- தெல்லியூர் சி.ஹரிகரன் -

இந்தவாரம் இவர்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

# சாம்சங் நிறுவனத்தின் நிறுவுனர் லீ குன் ஹீ




சர்வதேச அளவில் ஸ்மார்ட்போன், தொலைக்காட்சிகளுக்கு முன்னணி நிறுவனமாக சாம்சங் நிறுவனத்தை உருவாக்கிய அதன் நிறுவனர் லீ குன் ஹீ பற்றி இந்தவாரம் அறிந்து கொள்வோம் - உலகின் மிகப் பெரிய நிறுவனமான இந்த நிறுவனத்தின் இயக்குநர் உலகளவில் எவ்வாறு புகழ்பெற்றார் ?

சாம்சங்நிறுவனம்தென்கொரியாவில் தோன்றி, உலகம் முழுவதும் பல்வேறு கிளைகளுடன் புகழ் பெற்று விளங்கும் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனமாகும்.

லீ குன் ஹீவின் தலைமையின் கீழ், சாம்சங் உலகின் மிகப்பெரிய ஸ்மார்ட் போன்கள் மற்றும் தொலைக்காட்சிகள், பிரிட்ஜ், வாஷிங்மெஷின் உள்ளிட்ட பல்வேறு வீட்டு உபயோக பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாக உயர்ந்தது, இன்று நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருவாய் தென் கொரியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கிற்கு சமமாகும்.

உலக அளவில் சாம்சங் நிறுவனத்தின் ஸ்மார்ட்போன்கள், தொலைக்காட்சிகள், எலக்ட்ரானிக்ஸ் பொருள்களுக்கு மிகப் பெரிய வர்த்தகம் இன்றும் உள்ளது. தந்தையின் இறப்புக்குப் பிறகு 1987ஆம் ஆண்டு லீ குன் ஹீ அதன் பொறுப்பை ஏற்றார். இவரது தலைமைக்கு பின்னர் சாம்சங் தொழில்நுட்ப உலகில் தவிர்க்க முடியாத சக்தியாக வளர்ந்தது.

1990களில் சாம்சங் நிறுவனம் உருவாக்கிய மெமரி சிப் ஜப்பான், அமெரிக்க உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் விற்பனையில் சக்கைபோடு போட்டது. 2000 ஆம் ஆண்டுகளில் செல்போன் உற்பத்தியில் முன்னணி நிறுவனமாக வளர தொடங்கியது. 1987 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டுவரை சாம்சங் குழுமத்தின் தலைவராக லீ குன் ஹீ இருந்தார். 1998 முதல் 2008 ஆம் ஆண்டுவரை சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக இருந்துள்ளார் லீ குன் ஹீ.

தென்கொரியாவில் வணிகத்தில் ஆதிக்கம்செலுத்தும், குடும்பகட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களில் சாம்சங் மிகப் பெரியது. யுத்தத்தால் ஏற்பட்ட பேரழிவில் இருந்து உலகின் 12 ஆவது மிகப் பெரிய பொருளாதாரத்திற்கு தென்கொரியாவை உயர்த்தியதில் சாம்சங் முக்கிய பங்கு வகிக்கிறது. திரைமறைவு, அரசியல் உறவுகள் மற்றும் போட்டியாளர்களை வளர விடாமல் தடுத்து நிறுத்தியதாக குற்றச்சாட்டுகள் சாம்சங் நிறுவனர் லீ மீது உள்ளன. 1996ஆம் ஆண்டு தென்கொரியா நாட்டின் அதிபருக்கு லஞ்சம் கொடுத்தார் என்று குற்றம் உறுதி செய்யப்பட்டது. பின்னர், அந்த குற்றச்சாட்டில் அவர் மன்னிக்கப்பட்டார். அவர் மீதான வரிஏய்ப்புகுற்றமும் உறுதிசெய்யப்பட்டது.




ஒரு தனித்துவமான வாழ்க்கை முறைக்கு அறியப்பட்ட லீ குன் ஹீ, 2014 ஆம் ஆண்டு மாரடைப்பால் படுக்கையில் கிடந்தார். அவரது உடல்நிலை குறித்து சிறிதளவே தெரியவந்தது, அவரது இறுதி நாள்களில் கூட மர்மமே நீடித்தது. தலைவர் லீ ஒரு உண்மையான தொலைநோக்கு பார்வையாளர், சாம்சங்கை ஒரு உள்ளூர் வணிகத்திலிருந்து உலக முன்னணி கண்டுபிடிப்பாளராகவும், தொழில்துறை சக்தியாகவும் மாற்றினார்.

எமக்கெல்லாம் தெரிந்த சாம்சங், ஒரு போன், அவ்வளவுதான். ஆனால் உண்மையில் இந்த சாம்சங் கம்பனி, மிக மிகப் பெரிய நிறுவனம். தனக்கென சொந்தமாக ஒரு இராணுவத்தை வைத்துக் கொண்டுள்ள இந்நிறுவனம், அப்பிள் கூகுள் மற்றும் ஐ.பி.எம். மூன்று கம்பனிகளை கூட்டினால், எவ்வளவு தொழிலாளர்கள் மதிப்பு இருக்குமோ, அதைவிட சாம்சங் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் எண்ணிக்கை அதிகம்.

தென்கொரியாவின் இந்த உலகமகா நிறுவனம், தென்கொரிய GDP யில் 17% சாம்சங் நிறுவனத்திற்கு சொந்தம், என்றால் நம்புவீர்களா? ஆனால் அதுதான் உண்மை, சாம்சங் என்றால் கொரிய மொழியில், மூன்று நட்சத்திரம் என்று அர்த்தம்.

வெறும் மொபைல்போன் மட்டுமல்ல, கட்டுமானத்துறையில், உலகத்தில் மிகப் பெரிய கட்டடங்கள் அனைத்தும் கட்டியது, சாம்சங் கட்டுமான நிறுவனம் தான்.

மலேசியாவில் உள்ள பெட்ரோனாஸ் டவர், துபாயில் உள்ள புர்ஜ் கலிபா, மற்றும் தாய் பேய் நகரத்திலுள்ள TAIPEI 101 போன்ற பல அடுக்குமாடி கட்டடங்கள், சாம்சங்கட்டுமானநிறுவனம்கட்டியதுதான்.

கட்டுமானத்தில் இவை அனைத்தும், உலகத்தின் மிகப்பெரிய சின்னங்களில் ஒன்று. உலகத்தில் 14 ஆவது பெரிய கட்டுமானக் கம்பனி சாம்சங் கட்டுமான நிறுவனம்.

இதைத்தவிர கப்பல் கட்டும் தொழில், அதுவும் சின்ன கப்பல் எல்லாம் இல்லை, மிக மிக பிரமாண்டமான கப்பல்களை கட்டுவது சாம்சங் கப்பல் கட்டுமான நிறுவனம்.

இப்படி ஒரு மிகப் பெரிய ஆலமரம் போல் வளர்ந்துள்ள, இந்த சாம்சங் கம்பனி, ஆரம்பிக்கப்பட்ட வருடம் 1938 இரண்டாம் உலகப்போர் சமயம், தென் கொரியாவை ஜப்பான் ஆண்டு கொண்டிருந்த காலம் அது  அந்த வருடம்தான், சாம்சங் என்று ஒரு வர்த்தக நிறுவனமாக 1938 இல் லீ பியுங் - சுல் என்பவரால் நிறுவப்பட்டது . வெறும் 40 பேர் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு வியாபார கம்பனி, முதலில் மீன் மளிகை பொருள்கள் விற்பனை போன்றவற்றை மட்டும்தான் செய்தது.

அடுத்த மூன்று தசாப்தங்களில், குழு உணவு பதப்படுத்துதல், ஜவுளி, காப்பீடு, பத்திரங்கள் மற்றும் சில்லறை வணிகம் உள்ளிட்ட துறைகளில் பல்வகைப்படுத்தப்பட்டது. சாம்சங் 1960களின் பிற்பகுதியில் மின்னணுவியல் துறையில் நுழைந்தது மற்றும் 1970களின் நடுப்பகுதியில் கட்டுமானம் மற்றும் கப்பல் கட்டும் தொழில்களில் நுழைந்தது, இந்த பகுதிகள் அதன் அடுத்தடுத்த வளர்ச்சியை ஊக்குவிக்கும். 1987 இல் லீயின் மரணத்தைத் தொடர்ந்து, Samsung குழுமம், Shinsegae குழுமம், CJ குழுமம் மற்றும் Hansol Group, மற்றும் Joongang Group ஆகிய ஐந்து வணிகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டன.

குறிப்பாக மின்னணுவியல் துறையில், சாம்சங் நுழைந்தது ஒரு பெரிய வரலாறு. வெறும் வியாபார ஸ்தாபனமாக ஆரம்பித்த அந்த கம்பனி, 1970களில் கம்பியூட்டர்களை தயாரித்து, ஒரு தயாரிப்பு நிறுவனமாக தன்னை மாற்றிக்கொண்டது.

தயாரிப்புக்காகவும், எலக்ட்ரானிக்ஸ் துறையில் ஒரு முன்னோடியாக மாறவும், பெரும் பண முதலீடு செய்து, பல அற்புதமான பணியாளர்கள் இன்ஜினியர்கள் கொண்டு, சாம்சங் கம்பியூட்டர் செய்ய ஆரம்பித்த கம்பனி இன்று, சாம்சங் மொபைல் போன் டேப்லெட் கலக்ஸி என்று உலக வர்த்தகத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது 40 பேர் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனம், இன்று 40 லட்சம் மக்கள் கொண்ட நிறுவனமாக மாறி உள்ளது.

இதைத்தவிர சாம்சங் டிஜிற்றல் சிட்டி என்ற தென்கொரியாவின் தலைநகரில் உருவாக்கப்படும் ஒரு டிஜிற்றல் நகரமே, சாம்சங் நிறுவனத்திற்குச் சொந்தமானது.

இதைத்தவிர கொரியாவில் தீம் பார்க், அமெரிக்கா ஐரோப்பா ஏன் இந்தியாவில் கூட, தனது தடத்தைப் பதித்து உள்ளது.

ஒரு கம்பனி மிகப்பெரிய நிறுவனமாக மாறுவது என்பது, வெறும் பண முதலீடு மட்டுமல்ல, அங்கு வேலை செய்யும் மக்களின் எண்ணிக்கை, அவர்களின் திறமை, அந்தக் கம்பனியின் R&D என்றழைக்கப்படும் ஆராய்ச்சி செலவுகள், போன்ற எல்லாவற்றையும் கொண்டு தான், நான் ஒரு மிகப் பெரிய கம்பனி என்று சாம்சங் நிறுவனத்தை சொல்கிறேன்.

கடந்த பத்தாண்டுகளில் அவர்கள் ஆராய்ச்சிக்காக செலவு செய்த தொகை, 1400 கோடி அமெரிக்க டொலர்கள் ஆகும். கப்பல் கட்டும் தொழில் மட்டுமல்ல, இராணுவத்திற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனம் சாம்சங் நிறுவனம் தான்.

சர்வேதச அளவில் ஸ்மார்ட்போன், தொலைக்காட்சிகளுக்கு முன்னணி நிறுவனமாக சாம்சங் நிறுவனத்தை உருவாக்கிய அதன் நிறுவனர் லீ குன் ஹீ கடந்த 2020 ஆம் ஒக்ரோபர் 25 ஆம் திகதி காலை காலமானார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மதுபோதையில் சாரதி மட்டக்களப்பில் விபத்து

## இருவர் படுகாயம்

மட்டக்களப்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் மதுபோதையில் தனது காரை செலுத்திச்சென்றவரால் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்துக்குட்பட்ட பார்வீதியில் நேற்று பிற்பகல் கார் ஒன்று மோட்டார் சைக்கிளில் மோதியதில் பாடசாலை மாணவன் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு பார்வீதியில் பாடசாலை முடிந்ததும் மகனை ஏற்றிச்சென்றவரின் மோட்டார் சைக்கிளுடனேயே குறித்த கார் வேகமாக சென்று மோதியுள்ளது.

இதன்போது பாடசாலை மாணவனும் அவரது தந்தையும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து வீதியில் மறுபுறம் தனது பயணப் பாதையில் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் மீதே மோதியுள்ளது. காரை செலுத்திவந்தவர் மது போதையுடன் காணப்பட்டார் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியாவின் நனோ நைட்ரஜன் உரம் இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

இந்தியாவில் இருந்து நனோ நைட்ரஜன் திரவ உரத்தை அதிகமாக இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்துக்கு அனுமதியை பெறுவதற்காக நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது, இதற்கான அனுமதி வழங்கப்பட்டது எனக் குறிப்பிட்டார். அதேநேரம், கூட்டெருவை இலவசமாக விநியோகிக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு. மாவட்ட முற்போக்கு தமிழர் கழக இளைஞர்களினால் இரத்த தானம் நிகழ்வு

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட முற்போக்கு தமிழர் கழகத்தின் இளைஞர்களால் 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் நேற்று (வெள்ளிக்கிழமை) தொடக் கம் எதிர்வரும் 21.11.2021 திகதிவரை மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இரத்ததான முகாம் நடத்தப்படவுள்ளது.



இந்த நிகழ்வில் ஒரு கட்டமாக கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் முற்போக்கு தமிழர் கழகத்தின் பிராந்திய காரியாலயத்தில் மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலை வைத்தியர் மனோ துசாந்தன் தலைமையிலான அதிகாரிகளும் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகள் என பலரின் பங்குபற்றலில் இந்த இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நேற்று காலை 8 மணி முதல் மாலை 02.00 மணி வரை இடம்பெற்றது.

இதன்போது பெருந்திரளான இளைஞர்கள் இரத்த தானம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பாட்டும் நானே? ........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

∗ உலக சமுதாயத்தில் ஜனநாயகத் தன்மையுள்ள நாடுகளுடன் இணைய முடியாமல் சீனா தனித்து நிற்கிறது என்பது மற்றொன்று.

∗ சீனாவின் வலிமைமிக்க வளர்ச்சி மேற்குலக ஜனநாயக நாடுகள் பலவற்றை ஆட்டங்காண வைத்திருக்கின்றது என்பது பிறிதொன்று.

∗ ஆயிரம்தான் மற்றைக் கட்சிகள் 'தலைதலையாய்' அடித்துக் கொண்டாலும்

உலக அரங்கில் ஈழத் தமிழர் விடயத்தில் இன்றைக்கும் கூட்டமைப்புத்தான் அங்கீகாரம் பெற்றிருக்கிறதென்பது வேறொன்று.

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ உலக அரங்கச் செயற்பாடுகளில் சுமந்திரன் தவிர்க்க முடியாதவராகிறார் என்பதை வாரியார் சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டாரே! ஏதாவது 'லடாயோ'?**

**கேள்வி:-** எந்நேரமும் இலங்கையில் பொருளாதார வெடிப்பொன்று நிகழலாம். **(Economic Blast )** என வெளிநாட்டுப் பொருளாதாரச் சஞ்சிகை ஒன்று தெரி வித்திருக்கிறதாமே?

**பதில் :-** நானும் படித்தேன். கைமீறிப் போகும் தேவைகளை நிறைவேற்றுவதற்காய், வரையறை களை மீறி பணத்தாள்களை இலங்கை அச்சிடத் தொடங்கிய பொழுதே அதற்கான அத்திவாரம் இடப்பட்டு விட்டது. பொருள்களின் இன்றைய விலையேற்ற மும், பரவலாக நிகழத் தொடங்கியிருக்கும் மக்கள் போராட்டங்களும், ஆளுங்கட்சியின் கூட்டணிக்கட்சி கள் காட்டத் தொடங்கியிருக்கும் எதிர்ப்பு நடவடிக்கைக ளும் மேற்சொன்ன விடயத்தின் விளைவுகள்தான் என்று எண்ணத் தோன்றுகிறது. 'பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை' என்றார் வள்ளுவப் பெருமான். இவ்வுலகு மட்டுமல்ல ஆட்சியும் இல்லாமல் போக வாய்ப்பிருக்கிறது. எந்த நிமிடமும் நாம் வங்கிகளிலும் கைகளிலும் வைத்திருக்கும் பணம் பெறுமதியற்றுப் போகலாம் போல் தெரிகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ எத்தனையைத் தாங்கிப்போட்டம். இதைத் தாங்க மாட்டோமா? ஹி..ஹி..**

**கேள்வி:-** ஒருபக்கம் கொரோனாவின் கொடிய விளையாட்டு, இன்னொரு பக்கம் சீனா தரும் நெருக் கடி. மற்றொரு பக்கம் இந்திய, அமெரிக்க அரசாங்கங் களின் அச்சுறுத்தல், அதைவிட நாடெங்கும் தோன்றி யிருக்கும் அரச எதிர்ப்பலைகள். என்ன செய்யப் போகிறது நம் அரசாங்கம்?

**பதில் :-** பழைய தமிழ்ப்பாடல் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. ஒருவனது வீட்டில் நின்ற மாடு கன்று போடத் தொடங்கியதாம். அப்போது பார்த்து மழையும் கொட்டத் தொடங்க அம் மழையின் வேகத்தால் அவன் இருந்த வீடு இடிந்து வீழ்ந்ததுவாம். அதில் அகப்பட்டு அவன் மனைவி காயப்பட்டாளாம். உதவிக்கு அழைக்கலாம் என்று பார்த்தால் வீட்டின் வேலைக்காரன் இறந்து கிடந்தானாம். இத்தனைக்கும் நடுவில் மழை பெய்கையில் நெல் விதைக்கா விட்டால் அடுத்த ஆண்டு இன்னும் வறுமை சூழுமே எனும் அச்சத்தில் போட்டதைப் போட்டபடி விட்டுவிட்டு வீட்டில் கிடந்த விதைநெல்லைக் கொண்டு அவன் வயல்நோக்கி ஓடினானாம். அவனை வழியில் நின்ற பழைய கடன்காரன் ஒருவன் மறித்து கடனுக்காக இவ்விதை நெல்லைக் கொடு என்று அதனையும் பறித்துக் கொண்டானாம். அடுத்தடுத்து வந்த இந்த சோதனைகளால், சோர்வுற்று அவன் வீடு திரும்ப, வழியில் அவன் மனைவி இறந்த செய்தியை ஒருவன் கொண்டுவந்தானாம். பதறிப் போன இவன் வீட்டிற்குள் நுழைய முயல அந்நேரம் பார்த்து தவிர்க்க முடியாத விருந்தினன் ஒருவன் வீட்டுவாசலில் வந்து நின்றானாம். தன் துன்பத்தை மறைத்து வந்தவனை உப சரிக்கலாம் என்று உடைந்த வீட்டிற்குள் நுழைய அங்கிருந்த பாம்பொன்று அவனைக் கடித்ததாம். பரிதவித்துப் போன அவன் வெளியில் ஓடிவர, அரச ஊழியர்கள் நிலவரிப்பணம் கேட்டு வந்து நின்றனராம். அந்நேரம் பார்த்து கோயிலுக்கான மாதாந்தப் படிக்காசைக் கேட்டு குருக்களும் வந்து கைநீட்டினராம். இந்தச் செய்தியைச் சொல்லும், இராமச்சந்திரக் கவிராயர் எழுதிய பாடலை இனிப் பாருங்கள்.

**ஆவீன மழை பொழிய இல்லம் வீழ அகத்தடியாள் மெய் நோக அடிமை சாக**
**மாவீரம் போகுதென விதைகொண்டோட வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ள**
**சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்ற தள்ளவொணா விருந்து வர சர்ப்பம் தீண்ட**
**கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க குருக்கள் வந்து தட்சணைகள் கொடு என்றாரே!**

இதனையே 'போகூழ்க்' காலம் என்பர். கடும்பாவம் செய்த ஒரு மனிதருக்கு இயற்கை இத்தகைய தண்டனையை வழங்கும் என்கிறார்கள் பெரியவர்கள். நம் அரசாங்கத்திற்கும் இது 'போகூழ்க்' காலம் என்றே நினைக்கிறேன். அவர்கள் என்ன பாவம் செய்தனரோ யார் அறிவார்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ வாரதியார் கைப்புண்ணுக்கு கண்ணாடி தேடுகிறார் போல.**

# இலவச மருத்துவ முகாம்

உலக நீரிழிவு தினத்தையும், இன்சுலினையும் கண்டுபிடித்த நூற்றாண்டை முன்னிட்டு யாழ்.நீரிழிவுக் கழகமும் வடபிராந்திய லயன்ஸ் கழகங்களும் இணைந்து நடாத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை யாழ்.வைத்தியசாலை கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவமுகாமை டாக்டர் த.சத்தியமூர்த்தி (யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர்) ஆரம்பித்து வைக்கவுள்ளார். இவ் மருத்துவ முகாமில் இலவசமாக நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல் திணிவு சுட்டி, கண் பரிசோதனைகள், கற்றாக் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். அத்தோடு வாசிப்பு குறைபாடு உடையவர்களுக்கு வாசிப்பு கண்ணாடி இலவசமாக வழங்கப்படும்.

# இனப் படுகொலையும் .....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் அமுலாக்கப் பிரச்சினைகளெல்லாம், ஜே.ஆரின் மாகாண அமைப்பு சட்ட வரைவுகளில் வந்தவை. தமிழர் அரசியலில் இருந்த பிரிவினைகளைப் பாவித்து, அவர் தனது அதிகாரங்கள் எல்லா மாகாணங்களிலும் அமுலில் இருப்பதற்காக சுழியோடினார். 13 ஆம் சரத்துக்கு இசைவாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி (முன்னர் நிர்வாக அலகாக மாவட்ட சபைகளையே ஏற்றவர்கள்) அதனை ஏற்று, தேர்தலில் ஈடுபட்டு, நடைமுறைப்படுத்த, விடுதலைப் புலிகளின் இடர்பாட்டினால் தயங்கியது. அதைத் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அதை நடத்திய போதும், பிரேமதாஸாவின் அனுசரணையோடு விடுதலைப் புலிகள் அதனைக் குழப்பிக் கலைத்தனர்.

33 வருடங்களின் பின் அதை நடைமுறைப்படுத்தியிருந்தால் அதிலிருந்து வந்திருக்கக் கூடிய நன்மைகள் பற்றி புரிந்து, அவற்றை பேசி நடைமுறைப்படுத்த இந்தியாவிடம் கேட்க இந்தக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் தமிழரசுக் கட்சி பங்குபற்றாமல் சம்பந்தனோ, இது இந்தியா செய் தது, அதை அமுலாக்குவது அவர்களது பொறுப்பு, நாங்கள் அதை கேட்க வேண்டியதில்லை என சொன்னதாக ஊடகத் தலையங்கங்கள் சொல்லுகின்றன. சுமந்திரனையும் இன்னும் இரு சட்டத்தரணிகளையும் அமெரிக்காவுக்கு அனுப்புவதாகவும் செய்திகள் சொல்கின்றன. இது சம்பந்தன், சுமந்திரன் சொல்லி வரும் புதிய அரசமைப்பின் முன்பேச்சுகளுக்கானதா என்பது தெளிவில்லை.

தலைவலி தமிழர்களுக்கேயொழிய, இந்தியாவிற்கல்ல. மனோ கணேசனையும் ரவூப் ஹக்கீமையும் ரெலோ குழுவினர் அந்தக் கூட்டத் தில் பங்கு பற்ற வைத்துள்ளார்கள். ஆனால் அது தேர்தல் வாக்கு வங்கிக்கா அல்லது அதன் உண்மையான நடைமுறைப்படுத்தலுக்கா என புரிய வில்லை. சர்வ கட்சி கூட்டத்திலேயே ரவூப் ஹக்கீம் இணைப்பு C யை எதிர்த்து வெளியேறியவர். 13 ஆம் திருத்தத்தை ஏற்காதவர்.

ஆகவே அதனை அமுல்படுத்த முதலில் தமிழ்பரப்பில், அதை விரும்புபவர்களோடும் பேசியிருக்கவேண்டும்.கூட்டத்தின் பின் மனோ கணேசனுக்கு லண்டனிலிருந்து தமிழர் தகவல் நிலையம் (Tamil Information Centre) அனேகமான தமிழ் அரசி யல் கட்சிகளுடனும் சர்வதேசத்தில் இயங்கும் ஆர்வலர்களுடன் கலந் தாலோசித்து, இந்தியாவிற்கு தரப்பட்ட சமர்ப்பணத்தின் பிரதியை அனுப்பியிருந்தேன். அதன் பின்னணியையும் சொல்லியிருந்தேன். அதில் சமர்ப்பணம் செய்யப்பட்டவற்றை, தலைவர்கள் இந்தியாவுடன் எல்லோ ரும் இணைந்து பேசி பொருந்தி கொள்ளாமல் தேர்தலை குறி வைத்து நகர்வது பழையபடி அதிகாரங்களற்ற சுரக்காயை பெறுவதற்கு ஒப்பும்.

ஏற்படக்கூடிய ஒற்றுமையில் தங்களுக்கே முதலமைச்சர் பதவி கிடைக்க வேண்டும் என்று ரவூப் ஹக்கீம் அறிவிக்கிறார்.

தமிழர்கள் இந்தியாவிடம் எல்லாக் கட்சிகளுமாக இணைந்து கேட்க வேண்டியது இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றும் கோரிக்கையே. அது எல்லோரும் ஒற்றுமையாகக் கேட்க வேண்டியது.

(வளரும் .....)

காலைக்கதிர் Kalaikkathir

# அரச துறை செலவீனங்களைக் குறைத்து முன்வைக்கப்பட்ட பஸிலின் கன்னி 'பட்ஜட்'

## ஓய்வூதிய வயது 65 ஆக உயர்வு; எம்.பிக்களுக்கான ஓய்வூதியத் தகுதிக்காலம் 10 வருடங்களாக நீடிப்பு



அரச செலவீனங்களைக் குறைப்பதற்காக புதிய அரச அலுவலகங்கள் அமைப்பதற்கு இரண்டு வருடங்களுக்குத் தடை விதிக்கப்படுகின்றது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அவர், தமது அரசால் முன்வைக்கப்பட்ட யோசனைகளையும் வரிசைப்படுத்தியுள்ளார். அவரால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் வருமாறு:–

1) அரச செலவீனங்களை குறைப்பதற்காக புதிய அரச அலுவலகங்கள் அமைப்பதற்கு இரண்டு வருடங்களுக்குத் தடை.

2) மின்சாரத் தேவையாக சூரிய சக்தியை பெற்றுக்கொள்ளவும், அரச அலுவலகங்களின் தொலைபேசி பாவனையை 25 வீதம் குறைக்கவும் யோசனை.

3) அனைத்து அரச பணியாளர்களின் ஓய்வூதிய முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு, புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

4) அரச சேவையின் பணியாளர்களது ஓய்வூதிய வயது 65 ஆக உயாத்தப்படுகின்றது.

5) அனைத்துப் பாடசாலைகளுக்கும் நவீன இணைய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

6) ஓட்டோக்களுக்கான அதிகார சபை அமைக்கப்படவுள்ளது.

7) ஓய்வூதியம் பெறாத சிரேஷ்ட பிரஜைகளுக்கு ஓய்வூதியத் திட்டம். இதற்காக 100 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றது.

8) புதிய வியாபாரங்களுக்கு 2022 இல் பதிவுக்கட்டணங்கள் அறவிடப்படாது.

9) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் தகுதிக்காலம் 10 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

10) சேதனப் பசளையை ஊக்குவிக்க கிராம சேவகர் மட்டத்தில் திட்டம் முன்னெடுக்கப்படும்.

11) வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க, நிபந்தனைகளை தளர்த்துவதற்கு திட்டங்கள் விரைந்து முன்னெடுக்கப்படும்.

12) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு செல்வோருக்கான பயிற்சிகள் மேம்படுத்தப்படும்.

13) அரச சேவையாளர்களுக்கான எாபொருள் 5 லீற்றர்களால் குறைக்கப்படும். மாதாந்த தொலைபேசி கட்டணம் 25 வீதத்தால் குறைக்கப்படும்.

**நிதி அமைச்சரின் உரை**

ஏற்றுமதி தொழிற்சாலைகளை மீண்டும் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சௌபாக்கிய நோக்கு திட்டத்தில் அதற்கான பரந்த வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம்.

கடன் நெருக்கடிக்கு மத்தியிலும் 2 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகள் இரண்டினை செலுத்தியுள்ளோம். 2018 ஏப்ரல் 2019 ஜூலை மாதம் வரையில் 15 மாதங்களில் 6.9 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டிய பாரிய சுமை எமக்குச் சுமத்தப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டத்தின் அதிக செலவு - கடன்களுக்கான வட்டியை செலுத்தவே ஒதுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை மூலமாக கிடைத்த 5 பில்லியன் ரூபா கிடைக்காது போயுள்ளது, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் மூலமாக கிடைக்க வேண்டிய நிதியும் குறைவடைந்துள்ளது.

உற்பத்திப் பொருளாதாரத்துக்கு முன்னுரிமையும், நாட்டில் பொருளாதாரத்தை உற்பத்தி பொருளாதாரத்தின் பக்கம் கொண்டுசெல்லும் வேலைத்திட்டம் அவசியமாகின்றது. வாழ்வாதார விலைவாசி அதிகரிப்பு சவால்கள், நிலையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க எந்த அரசுக்கும் முடியாமல் போனமையே உண்மையாகும்.

வியாபார மாபியா மற்றும் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தும் தரகர்கள் சமூகத்தில் கலந்துள்ளனர். இது குறித்து சகலரும் அவதானமாக இருக்க வேண்டும். சர்வதேச போதைப்பொருள் மாபியாக்குள் இலங்கையை சிக்கவைக்கும் முயற்சி இன்றும் பலமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இளைஞர்களே இதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். ஆசிய வலயத்தின் ஏனைய நாடுகளை விடவும் எம்மால் விரைவாக மீட்சி காண முடியும் என்ற நம்பிக்கை எம்மிடத்தில் உள்ளது. ஆசியக் கண்டத்தின் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட நாடாகவே இலங்கையை பலர் அடையாளப்படுத்துகின்றனர் - என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினருக்காக இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தை சைகை மொழியில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் அதிகளவு மழைவீழ்ச்சி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீ வில் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 119.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் கடும் மழையின் தாக்கத்தால் 14 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டோர் உறவினர்களது வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை; பிரிட்டன் தூதருடன் கூட்டமைப்பு பேச்சு!



(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹில்டன் அம்மையாரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் சந்தித்துப் பேசினர். கொழும்பில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

# காணாமல்போனோரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்க 30 கோடி ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, நவ. 13

காணாமல்போனோரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு மேலதிகமாக 30 கோடி ரூபா ஒதுக்கப்படும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பல்வேறு காலப்பகுதியில், பல்வேறு காரணங்களால் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதிக்கு மேலதிகமாகவே இந்த 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2015 - 2019 காலப் பகுதியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு, நிவாரணம் வழங்க மேலதிகமாக 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் நிதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.